**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

**Case No : CC.No. 557/2022**

Prosecution witness: 5

| | | | |
|---|---|---|---|
| Name: | ராமகிருஷ்ணன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 04.07.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது காவல் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2013ம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம், ஒட்டஞ்சத்திரம் காவல் நிலையத்தில் இருநது பணி மாறுதலாக கன்னிவாடி காவல் நிலையம் வந்து பணிக்கு அறிக்கைசெய்து கொண்டு கன்னிவாடி காவல் நிலைய குற்ற எண்.82/2013,ச/பி 8(C) r/w 20(b)(ii)(C) NDPS Act ஆக வழக்கு பதிவு செய்து முதல் விசாரணை செய்திருந்த காவல் ஆய்வாளர்-சுகுமாரன் என்பவர் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் அந்த வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துகொண்டேன். 01.08.2013ம் தேதி எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காலை.8.00 மணிக்கு போலீஸ்பார்ட்டி மற்றும் சாட்சிகள் சுப்பிரமணி, சக்திவேல் ஆகியோர்களுடன் தருமத்துபட்டி - கோம்பை ரோடு, புறாமரம் பேருந்துநிலையம் அருகில் 1 வதுஎதிரி செ ளந்திரபாண்டி 2 வது எதிரி-பசுங்கிளி ஆகியோர்களை

கைதுசெய்தேன். அவர்களை விசாரித்தபோது சௌந்திரபாண்டி தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். பசுங்கிளி என்பவர் 9.45 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் சௌந்திரபாண்டி ஒத்திக்கு பிடித்திருந்த கரிசல்பட்டியை சேர்ந்த ஆரோக்கியம் என்ற ராமருக்கு சொந்தமான தருமத்துபட்டியில் இருநது கோம்பை ரோடு செல்லும் பாறைகொட்டை பிரிவு மண் ரோட்டில் மெட்டுக்கோம்பையில் உள்ள தோட்டத்தில் போடப்பட்டிருந்த ஆஸ்பெட்டாஸ் செட்டிற்கு தெற்கு பக்கம் உள்ள கருவேல முள் மர புதரில் சாக்குப்பையில் மறைத்து வைத்திருந்த சுமார் 6 ½ கிலோ உள்ள கஞ்சாவை 12.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதிலிருந்து பகுப்பாய்வுக்காக தலா 100 கிராம் வீதம் இரண்டு பொட்டலங்கள் பேப்பரில் எடுத்து நூலால் கட்டி SHO முத்திரை பதித்து அதற்கு S7, S8 என குறியீடு செய்தேன். மீதம் உள்ள கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து கட்டி SHO முத்திரை பதித்து அதற்கு A4 என குறியீடு செய்தேன். பசுங்கிளி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர்எங்களை அழைத்து சென்று அடையாளம் காட்டி ஆஜர் செய்த அதே முள் புதரில் மறைவில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய 3 ½ கிலோ எடையுள்ள நடுவில் நூலும் வெளிப்புறம் தாளும் கொண்ட ஒரு பையில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய பொட்டலத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அதிலிருந்து பகுப்பாய்வுக்காக தலா 100 கிராம் வீதம் இரண்டு பொட்டலங்கள் பேப்பரில் எடுத்து நூலால் கட்டி SHO முத்திரை பதித்து

அதற்கு S9, S10 என குறியீடு செய்தேன். மீதம் உள்ள கஞ்சாவை அதே பையில் வைத்து கட்டி SHO முத்திரை பதித்து அதற்கு A5 என குறியீடுசெய்தேன். மேற்படி பொருட்களை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் 14.00 மணிக்கு கன்னிவாடி காவல் நிலையம் வந்து பாரா வசம் ஒப்படைத்து பின்னர் படிவம்-91 ன் மூலம் சொத்துக்களையும், எதிரிகளையும் வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் என்னுடன் வந்திருந்த போலீசார் மற்றும் சாட்சிகள் சுப்பிரமணி, சக்திவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் மாதிரிக்கு எடுக்கப்பட்ட பொட்டலங்கள் அனைத்தையும் இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்ப நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் நீதிமன்ற உத்தரவின் படி இரசாயன பகுப்பாய்வு செய்து அதன் அறிக்கை வரப்பெற்றது. அதன் நகலை பெற்று நான் நீதிமன்ற தலைமை எழுத்தர், இரசாயன பகுப்பாய்வுக்கு கொண்டுசென்ற தலைமைக்காவலர்-கோட்டைராஜ், மற்றும் அறிவியல் அலுவலர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆய்வாளர் -சுகுமாரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சேகரிக்க பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய போதிய முகாந்திரம் இருந்ததால் 07.09.2013 அன்று ச/பி 8(C) r/w 20(b)(ii)(C) and 25 NDPS Act கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். 1-2 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 9 மற்றும் 10 ஆகும்(ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது) 1வது எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதற்கான தயாரிக்கப்பட்ட படிவம்-91 அ.சா.ஆ. 11,

2 வது எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதற்கான படிவம்-91 அ.சா.ஆ., 12, 1 வது எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அ.சா.ஆ. 13, 2 வது எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அ.சா.ஆ. 14, பகுப்பாய்வு வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ. 15, பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ. 16 ஆகும். S7, S8 பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய மாதிரி கஞ்சா பொட்டலங்கள் சா.பொ.7 மற்றும் 8 ஆகும். A4 என குறியிடப்பட்ட மீதம் உள்ள கஞ்சா சா.பொ.9 ஆகும். 2 வது எதிரியிடம் இருநது கைப்பற்றப்பட்ட S9, S10 பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய மாதிரி கஞ்சா பொட்டலங்கள் சா.பொ.10 மற்றும் 11 ஆகும். A5 என குறியிடப்பட்ட மீதம் உள்ள கஞ்சா சா.பொ.12 ஆகும்.

<u>1-3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கன்னிவாடி காவல் நிலையத்தில் நான் 2013 ம் வருடம் எந்ததேதியில் பணியில் சேர்ந்தேன் என்று ஞாபகம் இல்லை. 01.08.2013 ம் தேதி தகவல் கிடைத்து தகவலின் பேரில் சென்றேன். அந்த தகவலை எனது மேலதிகாரிகளுக்கு எழுத்துவடிவில் தயாரித்து அறிக்கையாக அனுப்பவில்லை. தொலைபேசி மூலம் தெரிவித்தேன். 3 வது எதிரி கைதுசெய்யப்பட்டநாள் 18.05.2013 ஆகும். நான் 01.08.2013 அன்று 1-2 எதிரிகளை கைது செய்த நாள் வரை சுகுமாரன் ஆய்வாளர் பணியில் இருந்தார். நான் பணியில் சேரும் முன்பாகவே அவர் கன்னிவாடி காவல் நிலையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார். இடைப்பட்ட காலத்தில் பொறுப்பு ஆய்வாளர் பணியில் இருந்திருப்பார் என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் புறாமரம் பேருந்துநிறுத்தத்தில் வைத்து 1-2 எதிரிகளை கைதுகசெய்யவில்லை என்றும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அவர்கள் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும கொடுக்கவில்லை

என்றும் சொன்னால் சரியல்ல. புறாமரம் பேருந்துநிறுத்தில் இருந்து மெட்டுக்கோம்பை மண்ரோடு அமைந்துள்ள இடம் எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்று ஞாபகம் இல்லை. 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கலாம். 1-2 எதிரிகளை புறாமரம் பேருநதுநிறுத்தில் வைத்தே கைதுசெய்துவிட்டேன். புறாமரம் பேருந்து நிறுத்தத்தில் வைத்து 1-2 எதிரிகளை கைது செய்ததற்கு கைது அறிவிப்பும், கைது நமூனாவும் அங்கேயே தயாரிக்கவில்லை. சம்பவ இடத்திற்கு காலை 8.00 மணிக்கு சென்றோம். அத்தாட்சி ஆவணத்தை யார் எழுதினார்கள் என்று ஞாபகம் இல்லை. காலை 11.00 மணிக்கு 1ம் எதிரிக்கான அத்தாட்சி தயாரிக்கப்பட்டது. அன்றைய தினம் கைத்தராசில் எடைபோட்டோம். அந்த விபரத்தை அத்தாட்சியிலோ, சாட்சிகளின் வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். SHO முத்திரை நிலைய பொறுப்பு அதிகாரியிடம் இருக்கும். அதுநிலையத்தில் தான் இருக்கும் என்றால் சரியல்ல. தேவையானால் வெளியே எடுத்து செல்வோம். நான் அலுவலின் நிமித்தமாக வெளியில் செல்லும்போது எனக்கு அடுத்த மூத்த அலுவலரிடம் நிலைய பொறுப்பை ஒப்படைத்து செல்வேன். அவ்வாறு நிலைய பொறுப்பை ஒப்படைக்கும் நபரிடம் தான் SHO முத்திரை பாதுகாப்பாக இருக்கும் என்றும் அதை வெளியில் எடுத்து செல்ல அனுமதியில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அத்தாட்சியில் எதிரிகளின் கையொப்பமோ, ரேகையோ பெறவில்லை என்றால் சரிதான். சாட்சிகளாக கையொப்பம் இட்டவர்களின் கையொப்பத்தின் கீழ் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பொட்டலங்களில் என்ன விபரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று அத்தாட்சியில் குறிப்பாக கூறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம்( மெட்டுக்கோம்பை மண்ரோடு) குறித்து பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கவில்லை என்றால் சரிதான்.

கைதுகுறிப்பாணை சம்பவ இடமான ( மெட்டுக்கோம்பை மண்ரோடு) வைத்து தயாரித்தோம். கைது குறிப்பாணை காலை 8.00 மணிக்கு தயாரிக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். 1-2 எதிரிகளின் அத்தாட்சி இரண்டிலும் எதிரிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் கைது செய்ததற்கும், பொருட்களை கைப்பற்றியதற்கும் நிலையம் கொண்டு வந்ததற்கும் விரிவான அறிக்கையை தயாரித்து எனது மேலதிகாரிகளுக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. தொலைபேசி மூலம் தெரிவித்தேன். மாதிரி பொட்டலங்கள் மீது உள்ள துண்டுத்தாள்களை சம்பவ இடமான ( மெட்டுக்கோம்பை மண்ரோடு) வைத்து தயாரித்து ஒட்டினோம். 1-2 எதிரிகளின் கையொப்பம் அதில் இல்லை என்றால் சரிதான். வழக்கின் சொத்துக்களை பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டுகோள் கடிதம் 19.08.2013 அன்று நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது. படிவம்-91 நீதிமன்றத்தால் 19.08.2013 அன்றுதான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுவரை வழக்கு சொத்துக்கள் யாருடைய பாதுகாப்பில் இருந்தது என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவை காவல் நியைலத்தில் தான் இருந்தது. காவல் நிலைய பாதுகாப்பில் இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேண்டுகோள் கடிதத்தில் SHO மாதிரி முத்திரை எதையும் பதித்து அனுப்ப வில்லை என்றால் சரிதான். 1-2 எதிரிகளை கைதுசெய்தததும், சம்பவ இடம் சென்று பொருட்களை கைப்பற்றியதும், புலன்விசாரணை மேற்கொண்டதும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததும் ஆய்வாளராகிய நான் மட்டுமே என்றால் சரிதான். 3 வது எதிரி கைதுசெய்யப்பட்ட இடத்தையும் நான் பார்வையிட்டேன். மேற்படி 3 வது எதிரி கைதுசெய்யப்பட்ட இடத்தின்

அமைப்பை பார்வைமகஜர் மறறும் வரைபடமாக தயாரித்து எனது விசாரணையில் இணைக்கவில்லை என்றால் சரிதான். மீதம் உள்ள கஞ்சாவில்மீது ஒட்டப்பட்ட துண்டுத்தாளிலும் எதிரிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பிரிவு-25 சட்டப்பிரிவு எதற்காக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சம்பவ இடமானது தனியாருக்கு சொந்தமானது என்பதாலும், அது சட்டவிரோதமான கஞ்சாவை வைத்திருக்க பயன்படுத்தப்படதாலும் மேற்படி பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. ஆரோக்கியம் என்ற ராமருக்கு சொந்தமானது என்பதை உறுதிசெய்யவும், சம்பவ நேரத்தில் எதிரிகளின் பொறுப்பில் இருந்து வந்ததது என்பதற்கும் ஆவணங்கள் எதுவும் நான் சேகரிக்கவில்லை. அந்த இடத்தை எதிரிகள் தான் பயன்படுத்தி வந்தனர் என்பதற்கு சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன விதததில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் எதிரிகளிடம் இருந்து கஞ்சா எதுவும் இவ்வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முறையாக சாட்சிகள் எவரையும் விசாரணை செய்யாமலும் ஆவணங்களை முறையாக பரிசீலனை செய்யாமலும் தங்கள் காவல் நிலையத்தில் போடப்பட்டிருந்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக இறுதி அறிக்கை தாக்கல் செய்து அதனை அனுசரித்து உண்மைக்கு புறம்பாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் குற்றச்சாட்டுக்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் வழக்கு சொத்துக்களை ஆஜர்படுத்திய போது நீதித்துறை நடுவர் முன்பாக ஆஜர்படுத்தி சொத்துக்களின் புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை. நான் எனக்கு முன்னர் ஆய்வாளர் சேகரித்த ஆவணங்களின்

அடிப்படையிலும் நான் புலனாய்வை மேற்கொண்டேன். அவர் தயாரித்த ஆவணத்தின் அடிப்படையில் தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால்சரியல்ல. 2 வது எதிரியை நான் சொன்ன நேரத்தில் ்சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றும் அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த சான்றுப்பொருளையும் ஆஜர்படுத்தவில்ாலை என்றும் சொன்னால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளை அச்சுறுத்தி கையொப்பம் பெற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் பொருட்களுக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.